1979 மார்ச் 8]

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, குலசேகரப் பட்டினம், குலசேகரபாண்டியன் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்த நகரம். இதனால் தான் குலசேகரப்பட்டினம் என்ற பெயர் கொண்டது என்ற வரலாற்றுப் பெருமை இந்நகருக்கு உண்டு. இங்கிருந்து, இறால், சங்கு, கருவாடு, வெங்காயம், கருப்புக்கட்டி போன்ற பல பொருட்கள் ஏற்றுமதியாயிருக்கின்றன. அதற்குரிய பண்டகசாலையும் இன்னமும் இருக்கிறது. ஆகவே, வரலாற்று சிறப்புமிக்க அதனைத் துறைமுகமாக மாற்றுவதற்கு எல்லா வாய்ப்பும் வசதியும் உள்ளது. ஆதலால், பெரிய துறை முகமாக இல்லாவிட்டாலும், அப்பகுதி மக்களின் நன்மையைக் கருதி சிறிய மீன்பிடித் துறைமுகமாக மாற்றுவதற்கு அரசு முன் வருமா ? அது பற்றிய ஆய்வை அரசு நடத்துமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல், குலசேகரப்பட்டினத்திற்கு அருகிலேயே உள்ள வீரபாண்டியல் இறால் மீன், அதுவும் தரமான இறால் மீன் அதிகமாக இருப்பதாகத்தான் கணக்கெடுத்திருக்கிறார்கள். அதனால் மீனளத் துறை இதை ஆய்வு செய்து மீன்பிடி துறைமுகத்தை வளர்க்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருக்கிற இறால் மீன்கள் தமிழகத்திலேயே தரமானவை. அதிலும் குறிப்பாக, டூணா என்ற மீன்—வெளிநாட்டுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்கிற அந்த மீனும் அந்தப் பகுதியிலே அதிகம் கிடைக்கிற காரணத்தால், தொழில் துறையாக இதை விரிவு படுத்தும் நோக்கத்தோடு, மத்திய அரசை மீன்பிடி துறை முகமாக மாற்றக் கேட்டு பரிசிலனை செய்யப்படும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

போளூர்-ஆலங்காயம் மலைச் சாலை

*வினா எண். 291—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரிலிருந்து ஓம்னாமத்தூர் வழியாக மலைப்பகுதியில் ஆலங்காயம் வரை தார் சாலை போடும் வேலையை எடுத்து செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) உண்டு.

(ஆ) மத்திய அரசு அனுமதித்த தொகை ரூபாய் 75 இலட்சங்கள். வேலை புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

[1979 மார்ச் 8

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. என். பழனிவேல் : நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ணுகிறேன். அரிசன நலத்தைப் பற்றிய கேள்விக்கு நீங்கள் இரண்டு நிமிடம் கூட அனுமதிக்கவில்லை. வேறு சிலருக்கு இரண்டு நிமிடங்களுக்கு மேல் பேச அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். இப்பொழுது கேள்வி நேரத்தை நீட்டித்து இருக்கிறீர்கள். உங்கள் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. உங்கள் சிரமத்தை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால், நீங்கள் தான் எங்களை அனுமதிக்கவில்லை. எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை. 10 மணிக்கு கேள்வி நேரம் முடிகிறதென்றால், அதைச் சரியாக 10 மணிக்கு முடித்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்படிச் சொன்னால், நான் மற்ற வினாக்களுக்கான விடைகளை நடவடிக்கைக் குறிப்பில் அச்சடித்துக் கொடுத்து விடுகிறேன்.

தேனியில் பணி நிலையம் அமைத்தல்

*வினா எண். 292—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78 பட்ஜெட்டில் குறிப்பிட்டபடி, தேனியில் கட்டப்பட வேண்டிய Service shed-ம், திண்டுக்கல்லில் கிணறுகளை ஆழந்தோண்டும் பணிகளும் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) அதனுடைய உபயோகம் என்ன ?

(இ) விவசாயத்திற்கு அந்தப் பகுதியில் எந்த வகையில் உபயோகப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தேனியில் பணி நிலையத்தைக் (Service shed) கட்டி முடிப்பதற்கான வேலை பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஆனால்,

---

*வினா எண். 292 முதல் 297 வரை மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கை குறிப்பில் அச்சிடப் பெற்றுள்ளன.